ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2440/21 - 2025 ජුනි මස 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.06.12

*2440/21 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**சபரகமுக மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான) சட்டத்தில் (2) ஆவது பிரிவுடன் வாசிக்க வேண்டிய 252 ஆம் அதிகாரம் கொண்ட மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தில் 326 ஆவது பிரிவின் கீழ் விதிக்கப்படும் விதிகள்*

சபரகமுவ மாகாணத்தின் ஆளுநர் ஏ. ஏ. சீ. ஜே. ராஜரத்ன ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்க வேண்டிய 252 ஆம் அதிகாரம் கொண்ட மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 326 ஆவது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக அமைந்த விதிகள் இதில் கீழ் வரும் உத்தரவுகள் வெளியிடப்படுகிறது என இதன்மூலம் அறிவிக்கின்றேன்.

**ஏ. ஏ. சீ. ஜே. ராஜரத்ன,**
ஆளுநர்,
சபரகமுவ மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்.
புதிய நகரம்.
மாகாண சபை கட்டிடம்,
2025, யூன் 06.



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**விதிகள்**

1. 252 ஆம் அதிகாரம் கொண்ட மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 188(1)(கக) துணைப் பிரிவில் இந்த விதிகளுக்கு அமைய சபரகமுவ மாகாண மாநகர சபை சம்பந்தமாக அதன் நகராதிபதி, பிரதி நகராதிபதி மற்றும் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவுகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபை (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது பிரிவு உடன் வாசிக்க வேண்டிய 289 ஆம் அதிகாரத்தின் கீழ் செய்யும் உத்தரவு மூலம் விதிக்கப்பட்டுள்ள அளவுகளாக இருக்க வேண்டுமாயின் அதற்காக பிணைப்பு உத்தரவுகள் மூலம் ஏற்பாடுகள் செய்துள்ளததால் சபரகமுவ மாகாண சபை தற்போது கலைத்துள்ள நிலையில் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபை (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்க வேண்டிய 252 ஆம் அதிகாரத்தில் உள்ள மாநகர சபை கட்டளை சட்டத்தின் 289 ஆம் அதிகாரத்தின் கீழ் செய்யும் உத்தரவு சபரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாநகர சபை மற்றும் கேகாலை மாநகர சபைக்கு 262 ஆம் அதிகாரத்தில் உள்ள உள்ளூராட்சி மன்ற வாக்கெடுப்பு கட்டளைச் சட்டத்தில் ஏற்பாடுகளுக்கு அமைய உறுப்பினர்கள் தெரிவுசெய்து அவர்களின் பதவிக்காலம் 2025, யூன் 02 ஆந் திகதி ஆரம்பிக்க வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளதாலும் சபரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாநகர சபை மற்றும் கேகாலை மாநகர சபையில் நிருவாகத்திற்கு உருவாகியுள்ள மேற்கூறப்பட்ட விசேட சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இந்த விதிகள் செயல்படுத்தப்படுகின்றன.

2. இந்த விதிகள் சபரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாநகர சபை மற்றும் கேகாலை மாநகர சபை நகராதிபதி, பிரதி நகராதிபதி மற்றும் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவுகள் செலுத்துவது தொடர்பான விதிகள் என்று அழைக்கப்படும்.

3. சபரகமுவ மாகாணத்தில் நகர சபை சம்பந்தமாக நகராதிபதி, பிரதி நகராதிபதி மற்றும் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவுகள் செலுத்துவது தொடர்பான 252 ஆம் அதிகாரத்தில் உள்ள மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 289 ஆம் அதிகாரத்தின் கீழ் வெளியிடப்பட்ட உத்தரவுகள் அமுலுக்கு வரும் வரை செல்லுபடியாக இரத்தினபுரி மாநகர சபை மற்றும் கேகாலை மாநகரசபை நகராதிபதி, பிரதி நகராதிபதி மற்றும் உறுப்பினர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் இதன் ஏற்பாடுகள் செய்து கொடுத்த முறையிலே அமைய வேண்டும்.

4. மாநகரசபை நகராதிபதி, பிரதி நகராதிபதி மற்றும் உறுப்பினர்களுக்கு செலுத்த வேண்டிய மாதாந்த கொடுப்பணவு அளவுகள் காலத்திற்கு காலம் அது சம்பந்தமாக அரசு மூலம் எடுக்கப்படுகின்ற கொள்கை முடிவுகளுக்கு அமைவாக இருக்க வேண்டும் மட்டும் அப்படி அதிகபட்சத்திற்கு உட்பட்டு முந்தைய மாதத்திற்கான கட்டணம் அடுத்த மாதத்தில் செலுத்தப்பட வேண்டும்.

5. கீழ் கூறப்படும் சந்தர்ப்ப சூழ்நிலை காரணங்களின் கீழ் இருந்தால் ஏதாவது ஒரு நகராதிபதி, பிரதி நகராதிபதி மற்றும் உறுப்பினருக்கு கொடுப்பனவுக்கான உரிமை இல்லாதிருக்க வேண்டும்

   (1) மாநகரசபை கூட்ட நடவடிக்கைக்காக துணை விதிகளின் கீழ் மாநகர சபையின் செயல்கள் ரத்து செய்யப்பட்ட உறுப்பினர் தொடர்பாக அப்படி ரத்து செய்யப்பட்ட கால எல்லையில்

   (2) இலஞ்சம் அல்லது ஊழல் புலனாய்வு ஆணைக்குழு சபை சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதாவது குற்றச்சாட்டுக்கு கைது செய்து காவலில் அல்லது சிறையில் இருக்கும் கால எல்லையில்

   (3) மாநகர சபையின் அனுமதியுடன் வைத்திய காரணங்களுக்காக அல்லது வேறு மாநகர சபையின் அலுவலக வேலையொன்றுக்காக விடுமுறை பெற்றிருப்பதை தவிர மாநகர சபையின் அனுமதியுடன் அல்லது அனுமதியின்றி பொதுக் கூட்டங்களுக்கு பங்கேற்காமை

   (4). ஏதேனும் எழுத்துமூல சட்டத்தின் கீழ் சபை அல்லது சபை நகராதிபதி, பிரதி நகராதிபதி மற்றும் உறுப்பினர்களின் பதவி ரத்து செய்த வேளையில்.

6. மாநகர சபையொன்றில் கூட்டங்களுக்கு பங்கேற்கும் போது நகராதிபதி, பிரதி நகராதிபதி மற்றும் உறுப்பினர்களுக்கு மாதாந்தம் செலுத்த வேண்டிய சார்பு கொடுப்பனவு, பயணக் கொடுப்பனவுகளின் மொத்த தொகை அதிகபட்சத்திற்கு அமைவாக குறித்த மாநகர சபையின் வருடாந்த வரவுசெலவு ஆவணத்தில் வருமானத்தை கருத்தில் கொண்டு ரூபா 8,000.00 அதிகபட்சம் எனக் கொண்டு சபை மூலம் தீர்மானிக்கப்படுகின்ற தொகையாக இருக்க வேண்டும்.

7. நகராதிபதி, பிரதி நகராதிபதி மற்றும் உறுப்பினர்கள் மூலம் மேலே (6) துணைப்பிரிவின் கீழ் உள்ள கொடுப்பனவு கோருகையில் இந்த விதியின் கீழ் பின்னிணைப்பில் உள்ளடக்கியுள்ள படிவத்திற்கு அமைவாக முன்வைக்கப்படுகின்ற ஒரு அறிக்கையுடன் குறித்த மாத்திற்கான அடுத்த மாதத்திற்கு முறையான பயணக் கொடுப்பனவு வவுச்சர் முன்வைக்க வேண்டும்.

8. இந்த விதிகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் வடிவங்களில் ஏதேனும் குழப்பம் ஏற்படுமாயின் சிங்கள வடிவமே முன்னெடுக்கப்படும்.

**பின்னிணைப்பு**

**சார்பு கொடுப்பனவு மற்றும் பயண கொடுப்பனவை கோரிக்கை தொடர்பான அறிக்கை**

................................ **மாநகர சபை**

சார்புக் கொடுப்பனவு : .........................................
உறுப்பினரின் பெயர் : .............................................
பதவி : நகராதிபதி/ பிரதி நகராதிபதி/ உறுப்பினர்

| |
|---|
| தவிசாளருக்கு ரூ. 1,000.00, பிரதி தவிசாளருக்காக ரூ. 800.00, உறுப்பினர் ஒருவருக்காக ரூ. 700.00 ஆகும். அந்த அளவுகள் 12 மணித்தியாலங்கள் அல்லது அதற்கு மேல் 24 மணித்தியால காலத்திற்காக பொருந்தும். 6 மணித்தியாலத்திற்கு மேல் 12 மணித்தியாலத்திற்கு உட்பட்ட காலத்தில் இந்த கொடுப்பனவில் பாதி கிடைக்கும். |

............................... மாநகர சபை வேலைகளுக்காக பின்பக்கத்தில் விபரித்துள்ள இடத்திற்கு செல்வதற்காகும்.

1. தனிப்பட்ட வாகனத்தில் பாவிக்கின்ற போது (மோட்டார் வாகனத்தில் கிலோமீற்றருக்கு அதிகபட்சமாக ரூ. 20/- மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிக்காக அதிகபட்சமாக ரூ. 10.) செலவழித்த தொகை .............................*................................
2. சார்பு கொடுப்பனவு
3. கோரப்பட்ட தொகை

| ரூ. | சதம் |
|---|---|
| | |
| | |
| | |

ரூபா .................................................................................. சதம் ..................... கொண்ட மேல் குறிப்பிட்டுள்ள கோரிக்கைக்கு அடங்கப்படுவது ....................................... மாநகர செயல்களுக்காக நான் சென்ற பயணங்களுக்காக உண்மையான குறிப்பு எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பயணக் கொடுப்பனவுகள் மற்றும் சார்பு கொடுப்பனவுகள் உண்மையாகவே சபையின் காரணங்களுக்காக கொண்டுள்ளது என உறுதியளிக்கின்றேன்.

..........................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.
திகதி : ......................................................

EOG 06-0111

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.